தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-3-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் "வேளாண் மற்றும் உயிர் அமைப்புகள் பொறியியல் போக்குகள்" பற்றிய தேசிய கருத்தரங்கு நடைபெற்றது

"வேளாண் மற்றும் உயிர் அமைப்புகள் பொறியியல் போக்குகள்" (TABE'17) என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கின் தொடக்க விழா தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மார்ச் 27-28, 2017ஆம் தேதிகளில் நடைபெற்றது. இத்திட்டத்திற்கு புதுடெல்லி வேளாண் அமைச்சக இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் (ICAR), நிதியுதவி வழங்கியது.

கருத்தரங்கு தலைவர் மற்றும் முதல்வர் முனைவர் சி.திவாகர் துரைராஜ் அவர்கள் வரவேற்புரையாற்றினார். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் சமீப காலத்திய வளர்ச்சி நோக்கிய ஆய்வுச் சமூகங்களை வெளிப்படுத்துவதற்காக இத்தகைய அறிவியல் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டமைக்கான முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

கருத்தரங்கின் முதன்மை உரையை முனைவர் சி.ரா.அனந்தக்குமார், பதிவாளர் அவர்கள் வழங்கினார். மேலும் வேளாண் எரிசக்தி, சுற்றுச்சூழல், உணவு மற்றும் வேளாண் பதன்செய் பொறியாளர்களின் பங்கு, வேளாண் மற்றும் நாட்டின் நலனுக்காக அதிக அளவில் பயன்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டினார். விவசாயத்திலுள்ள முக்கிய சவால்களான தொழிலாளர் பற்றாக்குறை, ஆற்றல் நெருக்கடி, உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை, வறுமை ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாறுபாடு போன்ற காரணிகளை களைவதற்கான தீவிர தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை மேற்கோள் காட்டினார்.

தேசிய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் (ICAR) துணை இயக்குநர் ஜெனரல் (DDG) முனைவர் க. அழகுசுந்தரம் அவர்கள் துவக்கவுரை ஆற்றினார். மேலும் அவர், வேளாண் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு முக்கியமான பண்ணை இயந்திரவியல், உயிர் ஆற்றல், உணவு மற்றும் வேளாண் பதன்செய்தல், அறுவடை தொழில்நுட்பம் மற்றும் மண் மற்றும் நீர்வளப்

பாதுகாப்பு ஆகிய வேளாண் பொறியியல் துறைகளின் பங்கைப்பற்றி பாராட்டி உரையாற்றினார். வேளாண் பொறியியல் துறையின் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுதல் மற்றும் உரிய முறையில் ஆவண செய்வதன் தேவையை வலியுறுத்தி அதை சாதிப்பதற்கு இரை போன்ற நிகழ்வுகளின் பங்கைப்பற்றியும் உரையாற்றினார். ICAR-CIAE, போபால், IIT, சென்னை, UAS, பெங்களுர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, CSIR (மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம்), சென்னை வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம், பண்ணாரிஅம்மன் தொழில்நுட்பக் கல்லூரி, சத்தியமங்கலம், ஜெயின் பாசனம் (Jain Irrigation), ஜல்கான், தமிழ்நாடு மீன்வளத்துறை பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் மற்றும் ICAR-CIAE, கோவை ஆகிய நிலையங்களிலிருந்து வந்திருந்த பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் இந்த கருத்தரங்கில் கலந்துக்கொண்டதாகவும் தங்களது ஆராய்ச்சிகளின் கருத்துகளைப் பகிர்ந்துக் கொண்டதர்காகவும் வாழ்த்தி உரையாற்றினார்.

கருத்தரங்கு துணைத்தலைவர் மற்றும் வேளாண் இயந்திரவியல் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் டி.மனோகர் ஜேசுதாஸ் அவர்கள் நன்றி உரையாற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்